**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டுர்.**

**OS.No**. 205/2015

**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாசங்கர் | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | வெங்கடாஜலம் | வயது | : 51 |
| கிராமம் | மேச்சேரி | நாள் | : 20.02.2026 |
| தாலுகா | மேட்டுர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் மேட்டுர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வட்டாட்சியருக்கு வழங்கப்பட்ட சம்மன் அடிப்படையில் அவரது அனுமதியுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். **வட்டாட்சியர் அவர்கள் சாட்சியம் அளிக்க 20.02.2026 ம் தேதி எனக்கு கொடுத்த அனுமதி கடிதம் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எங்களுக்கு வழங்கப்பட்ட சம்மனின் குறிப்பிட்டுள்ள எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற 2014 ம் ஆண்டிற்குரிய சூரப்பள்ளி கிராம இறப்பு பதிவேடு, 2007 ம் வருடத்திய வாரிசு விண்ணப்பம் மற்றும் சான்றிதழ் வழங்கியதற்கான பதிவேடு, ஆகியவற்றிற்குரிய ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த சூரப்பள்ளி கிராம 2014 ம் வருடத்திற்குரிய **இறப்பு பதிவேடு அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் சா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த சூரப்பள்ளி கிராம 2007 ம் வருடத்திற்குரிய **வாரிசு விண்ணப்பம் மற்றும் சான்றிதழ் வழங்கியதற்கான பதிவேடு அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் சா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் சாட்சி சம்மனின் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப அட்டை விவரங்கள், 1981–1990 வரையிலான வாக்குசீட்டு விவரங்கள் ஆகியவை கொண்டுவருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் மேற்கண்ட ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்பதால் இது தொடர்பாக வட்டாட்சியர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் ஆகியோர்கள் அத்தாட்சி செய்து, வழங்கப்பட்ட கடிதங்கள் கொண்டுவந்துள்ளேன். **அந்த கடிதங்கள் அசல் சா.சா.ஆ.9 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. மேற்கண்ட இறப்பு பதிவேட்டில் மாரிமுத்து மகன் மாரியப்பன் என்பவர் 25.09.1989 ல் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் அவருக்கு வயது 23 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களில் வரிசை எண்.8, வருடம் 2014 ல் நாள் 29.01.2014 ல் தாசில்தார் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் மாரிமுத்து மகன் மாரியப்பன் அவர்களின் இறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக உள்ளது. சா.சா.ஆ.8 ன் அடிப்படையில் முனியப்பன் த/பெ.மாரிமுத்து கவுண்டர் என்பவர் கொடுத்த மனுவின் பேரில் மாரிமுத்து மகன் மாரியப்பனின் வாரிசு சான்றிதழ் 2007 ல் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் வாரிசுதாரர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் முனியப்பன் என்பர் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் வாரிசுதாரர் முனியப்பன் என்பவரின் வயது 54 என குறிப்பிடப்பட்டுள்ளது. சா.சா.ஆ.8 வாரிசு விண்ணப்பம் மற்றும் சான்றிதழ் வழங்கியதற்கான பதிவேட்டில் முதல் காலத்தில் வரிசை எண்ணும், 2 வது காலத்தில் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் விலாசமும், 3 வது காலத்தில் இறந்த நபரின் பெயரும், 4 ம் காலத்தில் மனுதாரர் பெயரும், 5 ம் காலத்தில் வாரிசுதாரர்களின் பெயர்களும், 6 ம் காலத்தில் அவர்களின் உறவுமுறையும், 7 ம் காலத்தில் அவர்களது வயதும், 8 ம் காலத்தில் வாரிசுசான்றிதழ் வழங்கியதற்கான கோப்பு எண் மற்றும் வட்டாட்சியர் கையொப்பம் ஆகியவை அடங்கும். மேற்கண்ட ஆவணத்தில் வரிசை எண்.1950 ல் மாரியப்பன் பெயர் எதுவும் குறிப்பிடவில்லை. சாட்சி சம்மனில் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டை விவரங்கள் ஆகியவை 2016 க்கு பிறகு கணினி மயமாக்கப்பட்டுவிட்டது. 2016 க்கு முந்தைய பதிவேடுகள் எதுவும் எங்கள் அலுவலகத்தில் இல்லை. மேலும் ஜலகண்டாபுரத்திற்குரிய 1981 – 1990 வரையிலான வாக்குசீட்டு விவரங்கள் எடப்பாடி தாலுக்கா அலுவலகத்தில் தான் இருக்கும். எடப்பாடி வட்டமானது எந்த வருடம் தனி தாலுக்கா ஆனது என்று எனக்கு நினைவில்லை.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

1) நான் சம்மனில் குறிப்பிட்டுள்ளவாறு நான் தாக்கல் செய்த ஆவணங்களின் அசலை கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். அந்த ஆவணங்கள் அனைத்தும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் ஆவணங்கள் ஆகும். இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி சம்மன் கிடைக்கப்பெற்ற பிறகு கிராம நிர்வாக

அலுவலரை தொடர்பு கொண்டு, தகவல் ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் அறிக்கை மட்டும் வழங்குமாறு கேட்டிருந்தேன். அந்த அறிக்கையில் நீதிமன்றத்தில் சாட்சியம் சொன்ன விவரம் தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை.

2) கிராம நிர்வாக அலுவலர் தவறான சாட்சியம் அளித்ததாலும், திருத்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்தததாலும், அவர் மீது புகார் கொடுக்கப்பட்டு எங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் அது சம்மந்தமான விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தற்போதைய கிராம நிர்வாக அலுவலர் இது குறித்து எனக்கு தெரிவிக்கவில்லை. எங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரத்தில் ஒருநாள் வருவாய் நீதிமன்றம் செயல்படுகிறதா என்றால் இல்லை. எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்ட உத்தரவின்பேரில் எங்கள் அலுவலகத்தில் எந்த விசாரணையையும் நடத்தப்படவில்லை, கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து, அதன்பேரில் மேல்முறையீட்டு விசாரணை நடத்தப்படும்.

3) எங்கள் அலுவகத்தில் பட்டாமாறுதல், வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் வழங்குவது சம்மந்தமாக எந்த தேதியில், யாரை விசாரித்தோம் என்று குறிப்பிட்டு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்றால் பிறப்பிக்கப்படும், அதற்குண்டான கோப்பு எங்கள் அலுவலகத்தில் பராமரித்து வருகிறோமா என்றால் வருகிறோம். அதேபோல் மாரிமுத்து மகன் மாரியப்பனுக்கு வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றிற்குண்டான உத்தரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறப்பு சான்றிதலுக்கு உண்டான உத்தரவு தாக்கல் செய்துள்ளேன். வாரிசு சான்றிதலுக்கு உண்டான உத்தரவு தாக்கல் செய்யவில்லை. வாரிசு சான்றிதலுக்கு உண்டான உத்தரவு அடங்கிய கோப்பை நான் பார்வையிட்டேனா என்றால் அந்த கோப்பு எங்கள் அலுவலகத்தில் இல்லாததால் வட்டாட்சியர் அவர்கள் இது தொடர்பாக சா.சா.ஆ.9 கடிதம் கொடுத்துள்ளார். பொதுவாக 10 வருடமான கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் அழித்துவிடப்படும், ஆனால் மேற்கண்ட வாரிசுசான்றிதழ் வழங்கிய உத்தரவிற்குண்டான ஆவணம் அழிக்கப்பட்டதற்கான உத்தரவும் எங்கள் அலுவலகத்தில் இல்லை.

4) மாரிமுத்து மகன் மாரியப்பனின் வாரிசு சான்றிதழ் எதன் அடிப்படையில் யாரை விசாரித்து வழங்கப்பட்டது என்ற விவரங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். அது தொடர்பான கோப்புகளும் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகலை வேறு அலுவலகத்திற்கு நகல் அனுப்பும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் முறையாக விசாரிக்கவில்லை என்றும், அதற்குண்டான கோப்புகளும் முறையாக பராமரிக்கவில்லை என்றும், சரியான விசாரணை எதுவும் மேற்கொள்ளாமல் தன்னிச்சையாக உத்தரவு பிறப்பிக்கிறோம் என்றால் சரியல்ல. அதேபோல் கோட்டாட்சியர் நீதிமன்றம் எதுவும் செயல்படாமல் பூட்ட தான் வைத்துள்ளனர் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அலுவலத்தில் அனைத்து உத்தரவுகளும் தன்னிச்சையாக விசாரணை மேற்கொள்ளாமல் பிறப்பிக்கிறோம் என்றால் சரியல்ல, அதனால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.